பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 27 சனிக்கிழமை (11 07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 226

# கந்தளாயில் துணிகர தாக்கு; 18 ராணுவத்தினர் உயிரிழப்பு!

## இயக்கச்சியில் 12 படையினர் பலி! 24 பேர் படுகாயம்

கொழும்பு, ஜுலை 11

இயக்கச்சியில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கடும் சண்டையில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் 24 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-எ)

## 18 நவீன ஆயுதங்கள் மீட்பு வேங்கைகளுக்கு இழப்பு இல்லை

யாழ்ப்பாணம், ஜுலை 11

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். 12 நிமிட நேரம் மட்டுமே நடந்த இந்தத் தாக்குதலில் 18 படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

இராணுவத்தினரிடம் இருந்து ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கிகள் உட்பட 18 நவீன ஆயுதங்களையும், இராணுவ தளபாடங்கள் பலவற்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். மோதலின்போது புலிகள் தரப்பில் இழப்பு எதுவும் ஏற்படவில்லை.

கந்தளாய் ரேடியோ சிலோன் முகாமில் இருந்து வானமடு முகாமுக்கு இராணுவத்தினர் நேற்று ரோந்து சென்ற சமயம் — ரேடியோ சிலோன் முகாமுக்கு 200 யார் தூரத்தில் வைத்து — அவர்களை வழிமறித்து விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் எதிர்பாராத இந்த அதிரடித் தாக்குதலின்போது இராணுவத்தினர் 18 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றும் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களும் ஏனையோரும் அருகிலுள்ள ரேடியோ சிலோன் முகாமுக்கு தப்பி ஓடிவிட்டனர்.

அதே சமயம் மோதலை அடுத்து இராணுவத்தினருக்கு உதவுவதற்காக வந்த வானமழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் புதிய தாக்குதல் திருமலையில் ஆரம்பம்

கொழும்பு, ஜுலை 11

விடுதலைப் புலிகள் போராளிகள் கூட்டமாகச் சென்று கந்தளாயில் நேற்று தாக்குதல் நடத்தினர் என்றும் —

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் புதிய தாக்குதல் ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்றும் வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

கந்தளாயில் விடுதலைப் புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 11

கந்தளாய் தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட பெருவாரியான ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் வருமாறு:—

- ★ ஏ கே. எல். எம், ஜி — 02
- ★ அவற்றிற்குரிய ரம் மகஸின் — 10
- ★ லிங்குகள் — 941
- ★ ரி 56 ரகத் துப்பாக்கி — 16
- ★ அவற்றிற்குரிய மகஸின் — 57
- ★ ஹோல்சர்கள் — 15
- ★ நடுத்தர ரவைகள் — 1,862
- ★ ஜே. ஆர். கிரனேட் — 02
- ★ நிலக்கண்ணி அகற்றி — 01
- ★ தொப்பிகள் — 13
- ★ சப்பாத்துகள் — 12 சோடி
- ★ பட்டிகள் — 08
- ★ பைகள் — 02
- ★ மழைக் கவசம் — 01

(ஒ)

# வளலாயில் அதிரடித் தாக்கு! 3 படையினர் பலி; பலர் காயம்

## ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன

பலாலி, வளலாய் இராணுவ காவலரண்கள் இரண்டின் மீது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். 10 நிமிட நேரம் மட்டுமே நீடித்த இந்த தாக்குதலில் மூன்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

இராணுவத்தினரிடமிருந்து ஆர். பி. ஜி. ஷெல் லோஞ்சர் ஒன்று உட்பட நான்கு நவீன ரக ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

பலாலி மோதலில் இராணுவத்தினர் கொல்லப்பட்டதையும், பலர் காயமடைந்ததையும், கொழும்பில் படை அதிகாரிகளும் ஒப்புக்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் வருமாறு:-

ஆர். பி. ஜீ. ஷெல் லோஞ்சர் — 1, ஜி3 ஏ3 ரகத் துப்பாக்கி — 1, ரி-81 ரகத் துப்பாக்கி — 2, அவற்றிற்குரிய மகஸின் — 2, ரம் மகஸின் — 4, நடுத்தர ரவைகள் — 165, லிங்குகள் — 125, தோட்டா ரவைகள் — 10, சப்பாத்து 1 சோடி.

(ஒ-165)

## 4 புலிகள் களப்பலி

வளலாயில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் நால்வர் களப்பலியாகினர்.

கப்டன் செங்கதிர் அல்லது லுக்மன் (பவோலியான் சின்னத்தம்பி — மணற்காடு), லெப்டினன்ட் கடரொளி அல்லது தீபன் (குழந்தைவேல் ரமேஸ், பருத்தித்துறை) ஆகியோரும் —

இந்திரன் (மயில்வாகனம் சந்திரன் — அரியாலை), நாவலன் (முனியாண்டி குமார் — கிளிநொச்சி) ஆகியோருமே வீரமரணமடைந்தனர்.

(ஒ-165)

குடாநாடு நேற்று சோகமயம்:

## புலிகளின் புகழுடல்களுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜுலை 11

வாடியடி மற்றும் இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களின்போது வீரமரணம் அடைந்த வேங்கைகளுக்கு நேற்று குடாநாடு எங்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடமராட்சி, தென்மராட்சி உட்பட குடாநாட்டின் சகல பகுதிகளும் சோகத்தில் மூழ்கி இருந்தன.

வீதிகள் எங்கும் தோரணங்கள் கட்டப்பட்டும், சிவப்பு-மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன. முக்கிய இடங்களில் சோக கீதங்கள் இசைக்கப்பட்டன.

பதின்மூன்று வீரவேங்கைகளின் புகழுடல்கள் நேற்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சார்ள்ஸ் அன்ரனி படை அணியின் சிறப்புத் தளபதி மேஜர் அசோகன் இயக்கச்சி மோதலில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜுலை 11

இயக்கச்சிப் பகுதியில் நேற்று இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணியின் சிறப்புத் தளபதி மேஜர் அசோகன் (இன்னி) (கந்தசாமி துரைரவீந்திரன் - வேம்படி, வல்வெட்டித்துறை) வீரச்சாவை அடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் கலைக்கோன் (அப்புத்துரை பிரபாகரன் - புத்தூர், அச்செழு, நீர்வேலி) என்ற போராளியும் வீரமரணமடைந்தார்.

மேஜர் அசோகனின் புகழுடல் இன்று வலிகாமம் பகுதியில் உள்ள வட்டுக்கோட்டை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்வாரியாக பிரிக்கப்பட்டு ஈழ அகதிகள் அடைப்பு!

### தமிழக அரசு நடவடிக்கை

சென்னை, ஜுலை 11

தமிழ்நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை அவர்களது சொந்த இடங்களின் அடிப்படையில் பிரித்து தனி முகாம்களில் தடுத்து வைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக தமிழ் நாடு அ. தி. மு. க. அரசு அறிவித்துள்ளது.

அ. தி. மு. க. அரசு அறிவித்துள்ள திட்டம் குறித்து சென்னைப் பத்திரிகைச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்களை முட்டுக்காடு மற்றும் கோவளம் முகாமிலும்—

முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களை செய்யார் வட்டத்திலுள்ள முதலியார் குப்பத்திலும்—

மன்னாரைச் சேர்ந்தோரை செங்கல்பட்டு கீளம்பாக்கம் மற்றும் செய்யார் வடபட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுப்புலட்சுமி கணவர் ஜெகதீசனை ஆஸ்பத்திரியில் கொல்ல முயற்சி!

சென்னை, ஜுலை 11

''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழக முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசனின் கணவரை ஆஸ்பத்திரியில் வைத்து சுட்டுக் கொலை செய்ய முயற்சி நடைபெற்றதா?

— இத்தகைய கேள்வி சென்னைப் பத்திரிகைச் செய்திகளில் எழுப்பப்பட்டிருக்கிறது:

ஈரோட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட சுப்புலட்சுமியும் அவரது கணவர் ஜெகதீசனும் பின்னர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

அடிக்கடி சுகவீனம் ஏற்பட்டதை அடுத்து ஜெகதீசன் அரசு மருத்துவமனைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கோவை மகேசன் நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை 11

சுதந்திரன், சுடர், வீரவேங்கை ஆகியவற்றின் ஆசிரியராகப் பணிபுரிந்த இனமான எழுத்தாளர் கோவை மகேசனது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இன்று பிற்பகல் 5 மணிக்கு விடுதலைப் புலிகள்

(... பக்கம் பார்க்க)

## மட்டு. ஆலங்குளத்தில் இரு தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜுலை 11

மட்டக்களப்பு ஆலங்குளம் கிராமம் கடந்த 7 ஆம் திகதி இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டது.

இந்தச் சுற்றி வளைப்பின் போது அங்கு தமிழ்ப் பொது மக்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும், மற்றும் ஆறு பொது மக்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெண்களிடம் இருந்த நகைகளும் மற்றும் பெறுமதி மிக்க உடைமைகள் பலவற்றையும் இராணுவத்தினர் சூறையாடிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 21HP இங்கிலிங் லிஸ்டர் என்ஜினுடன் கிறைண்டிங் மில் செற் விற்பனைக்குண்டு. ப. வைத்திலிங்கம், செங்குந்தா வீதி, [கல்வியங்காடு சந்தைக்கு முன்] வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு. [21682]

பொமனேரியன் ஆண் பெண் நாய்க்குட்டிகள் சிவப்பு வெள்ளை நிறங்களில் விற்பனைக்குண்டு J. அல்பிரட், இல 25, பாக்றோட், குருநகர் [21707]

### தேங்காய் விற்பனை

தேங்காய், தேங்காய் மட்டை என்பன நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படும் ஸ்ரீ சுகந்தி சேல்ஸ் சென்ரர் [நாவலர் கல்வி கழகத்துக்கு அருகில்]. நாவலர் வீதி, ஆனைப்பந்தி. [21696]

### தேவை

இயந்திர இயக்குனர் வேலை தெரிந்தவர்களும், அச்சுக் கோர்க்கத் தெரிந்தவர்களும் நேரில் வரவும். வேதனம்: ரூ 2,000 முதல் ரூ. 2,500 வரை. ஏ.எஸ்.ஜே பிரின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (4910)

### மணமகன் தேவை

29 வயது. இந்து. குற்றமற்ற பூரம் நட்சத்திரம் 1ஆம் பாதம், லக்கினத்தில் சேது உள்ள பட்டதாரி ஆசிரியைக்கு, 36 வயதிற்குள் அரச, தனியார் துறைகளில் மணமகன் தேவை. தொடர்பு இல. 851, மே/பா, உதயன். [5135]

செவ்வாய்க் குற்றமற்ற, 32 வயது B.Sc ஆசிரியைக்கும், 36 வயது பார்மசிஸ்டுக்கும், கனடாவிலுள்ள 25 வயது கத்தோலிக்கப் பெண்ணுக்கும் தேவை மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். [21694]

### மணப்பெண்கள் தேவை

34 வயது B Sc ஆசிரியருக்கும், 32 வயது சொந்த வியாபாரம் செய்பவருக்கும், 30 வயது டென்மார்க்கில் வேலை செய்பவருக்கும் மணப்பெண்கள் தேவை. செ. விஜயரெத்தினம் லெட்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். [21713]

### ENGLISH TUITION

Individual and House Visits By Retired Government Servant ontact, 204, Manipay Road Otumadam Jaffna on Sundays Between 8-00 a.m — 10-00 a m [5122]

### புலமைப்பரிசில் பரீட்சை

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெறுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 12-7-92 ஞாயிறு மு.ப 8-00 — மு.ப 11-00 நடைபெறும் பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். [21684]

### பொருளியல் வகுப்பு

G.C.E (A/L) பொருளியல், பொருளியல் சிறப்பு பட்டதாரி ஆசிரியரினால் தனிப்பட்ட முறையில் வீடுகளில் கற்பிக்கப்படும் விபரங்களுக்கு: அகிலா கல்வி நிலையம் ஸ்ரேசன் சந்தி, யாழ்ப்பாணம். [21673]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 12 7 92 ஞாயிறு காலை 9-15 மணிக்கு நடைபெறும். நாவலர் கல்விக் கழகம், நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி. [21697]

### வெளிவந்து விட்டது

91 August வைகாசி 92 விஞ்ஞான பாடங்களின் விடைகள் விற்பனையில், "A" Level Centre, 1 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் [சி-2750]

### O/L ஆங்கிலம்

Credit பெறுபேறடைய 92, 93 பரீட்சைகளில் B.Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி. திருநெல்வேலி. [21708]

### இலவச திருமண சேவை

30 வயது, அச்சுவினி, A/L படித்து ஜேர்மனியில் நிரந்தரத் தொழில் புரிபவருக்கு ஏற்ற அழகான மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம் து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [5134]

29 வயது, உத்தராடம் ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை பெண்ணை அழைக்க சகல ஏற்பாடுகளும் செய்யலாம். ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [5130]

27 வயது. ரோகிணி, செவ்வாய் 1, U.K. இல் தொழில் புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் U.K. இல் விரும்பத்தக்கது சகல தரங்களிலும் மணமக்கள் உண்டு சந்திப்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [5129]

### துர்க்கா திருமண சேவை

இல. 116, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். 1992-07-01 தொடக்கம் ஆரம்பித்துள்ளது. திங்கள், புதன், ஞாயிறு ஆகிய நாட்களில் தொடர்பு கொள்ளலாம். குறிப்பு: படத்துடன் தொடர்பு கொள்ளவும். (4997)

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் "அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்", இல.15 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம் அனைத்துக்கும் நாடுங்கள். தினமும் காலை 8மணி முதல் 12 மணி வரை. த.சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை — 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [நேரம் பிற்பகல் 2 முதல் 6 வரை] [21687]

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சினை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி [ஸ்ரீகைலாச பிள்ளையார் கோவில் சந்தி], நல்லூர். [21609]

## கீன்
கல்வி நிலையம்
திருநெல்வேலி.

பொருளியல்
எஸ். வரதராஜன்

**A/L 93**
சந்தைச் சமநிலை
ஞாயிறு பி. ப. 1-00

**A/L 94**
கேள்விக் கோட்பாடு
ஞாயிறு பி. ப. 2-00

ஆரம்பம்:
12-07-1992
ஞாயிறு
(சி-2562)

## MODERN EDUCATION CENTRE
நெல்லியடி.

யாழ்ப்பாண பல்கலைக் கழக
வெளிவாரிப் பரீட்சை
**G. A. Q; 1st. in Com.**

★ பொருளியல் ★
எஸ். வரதராஜன்

திங்கள் 3-00 — 6-30p m.
3-00 — 5-00 — பொருளியல் தத்துவங்கள்
5 00 — 6-30 — இங்கிலாந்தின் பொருளாதார அபிவிருத்தி

ஆரம்பம்:
13-07-1992
திங்கள் 3 00 p. m.
[சி-2914]

## ஓராண்டு போனாலும், ஓயாத நினைவலைகள்!
## தீராத பேரார்வம்! வாராயோ வானதியே!

தாயின் மடியில்: 19 — 02 — 1964



தாயக மண்ணில்: 11 — 07 — 1991

## கப்டன் வானதி
(செல்வி பத்மசோதி சண்முகநாதபிள்ளை)

அற்புத மான 'சோதி'! ஆற்றலே வடிவ மாகி(க்);
கற்பனை கடந்த திண்மைக் கற்பதே கனலாய் ஓங்கி;
உற்பவங் கொண்டு மானம் ஒன்றையே உயர்வாய் எண்ணி;
முற்றுமாய்ச் சொந்த மண்ணை மீட்பதே முடிவாய் ஏற்று;
பொற்புறத் தமிழர் ஈழம் புலவேவே எழுந்து பாடி(ப்):
பற்றுடன் களமும் ஆடிப் பறந்தனை மகளே! நாங்கள்
எத்தனை கோடி ஆண்டு இனித்தவம் செய்த போதும்
உத்தமி உன்னைப் போன்ற ஒருமகள் உதிப்பா ளாமோ!

— ஈழ மண்மீட்பிற்கு ஈன்று புறந்தந்தோர்.

இல. 174, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [21699]

## ஞானக் குழந்தை இல்லம்
## பாலர் பாடசாலை
(அரசடி வீதி)

1 ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று 11-07-1992 பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக நடைபெற உள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பாலர் கல்விக் கழகம்,
பெற்றோர், ஆசிரியர்கள்.
[21692]

## கண்ணீர் அஞ்சலி

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. சி. கருணாமூர்த்தி அவர்களின் அன்புத் தந்தையார்

### கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி
(இணுவில்)

அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கும், குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/முத்துத்தம்பி ம. வி.,
திருநெல்வேலி. [21710]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 04 — 09 — 1974



மறைவு: 11 — 07 — 1991

### தர்ஷன் பத்திநாதன்

தாயகத்தின் சேவையில் சென்ற ஆண்டு 11-07-1991 அன்று உயிர் நீத்த தர்ஷன் பத்திநாதனின் ஆன்ம இளைப்பாற்றிற்காக ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சஞ்சுவானியார் ஆலயத்தில் 11-07-1992 சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு நடைபெற இருக்கும் திருப்பலிப் பூசையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[21706] - நண்பர்கள்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 03 — 1966

மறைவு: 15 — 07 — 1989



### மேஜர் ஞானவேல்
(சிற்றம்பலம் தயானந்தராசா)

திதி: 11 — 07 — 1992

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

வரணி. [21679]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உரத்த குரலில் கூற முடியுமா?

1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடங்கிய பின்னர் ஆயிரக் கணக்கான பொது மக்களை ஸ்ரீலங்கா அரசாங்கப் படைகள் கொன்றிருக்கின்றன என்பது சர்வதேச ரீதியாக இப்போது ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது

ஸ்ரீலங்கா நிலைமை குறித்து, சர்வதேச மன்னிப்புச்சபை நேற்று முன்தினம் வியாழக்கிழமை 1991ஆம் ஆண்டுக்கான தனது அறிக்கையை லண்டனில் வெளியிட்டது. அந்த அறிக்கையிலேயே வடக்கு-கிழக்கில் ஆயிரக் கணக்கான அப்பாவிப் பொது மக்களை அரச படைகள் கொன்றிருக்கின்றன என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது

அந்த அறிக்கையில் உள்ள பல அம்சங்களை, சர்வதேச செய்தி நிறுவனங்களும், பல நாடுகளின் வானொலிகளும் எடுத்துப் பிரசித்தப்படுத்தியுள்ளன. இது சர்வதேச மட்டத்தில், வடக்கு-கிழக்கு நிலைமை குறித்துப் புதியதோர் தோற்றத்தை உருவாக்கியிருக்கிறது எனலாம்.

கடந்த இரண்டு வருடங்களாக நடக்கும் யுத்தத்தில் அரச படைகள் நடாத்தி வரும் வான், கடல், தரைத் தாக்குதல்களால் மடிபவர்களில் 90 சத வீதத்தினரும் அப்பாவித் தமிழ் மக்களே. இதுவே உண்மையான நிலை,

விமான, எறிகணை, சடப் பீரங்கித் தாக்குதல் நடத்திப் பொதுமக்களைக் கொன்று விட்டும், சுற்றிவளைப்பு, தேடுதல் என்ற பேரில் நேரில் சுட்டுக்கொன்று விட்டும், களத்தில் வைத்துப் போராளிகளைக் கொன்றதாக படையினர் பொய்யான தகவல்களை வெளியிடுகிறார்கள் தமிழர் தரப்புடன் தொடர்பு கொண்டு உண்மை நிலையை அறிவதற்குப் போதிய வசதிகள் இல்லாததால் சர்வதேச செய்தி நிறுவனங்களும் அரசாங்கப் படையினரின் பொய்களை அப்படியே சீரணித்துக் கொள்கின்றன. அனேகமாக அரசு சொல்வதையே உண்மை என்று எடுத்துக் கொண்டு அவற்றையே பரப்புகின்றன.

இத்தகைய ஒரு பாதகமான சூழ்நிலையில், சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை மூலம் வடக்கு - கிழக்கில் அரச படையினர் அப்பாவிப் பொதுமக்களையே அதிக எண்ணிக்கையில் கொல்கிறார்கள் என்ற உண்மை உலகின் பல பாகங்களையும் எட்டும் வாய்ப்பு உண்டாகியுள்ளது.

வடக்கு - கிழக்கு விவகாரம் ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்று கருதிக் கொண்டிருக்கும் பல நாடுகளின் கண்களை மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கை திறக்கச் செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் அரசாங்கம் தானே என்று கூறிக்கொண்டு தமிழர்களைக் கொன்றொழிக்கக் கொழும்பு அரசுக்கு உரிமை வழங்க முடியுமா? மனிதநேயத்தின் பாற்பட்டாவது பொதுமக்களைக் கொல்வதை நிறுத்துமாறு உறுக்கிக் கூறுவதற்கு உலக நாடுகள் முன்வரக் கூடாதா?

உண்மை நிலை ஊர்ஜிதம் செய்யப்பட்ட இக்கட்டத்திலாவது மனுநீதியின் பெயரால் உலக நாடுகள் செயலில் இறங்க வேண்டும். அப்பாவிப் பொதுமக்களைக் கொல்லும் யுத்தத்தை நிறுத்துமாறும், இராணுவத் தீர்வைக் கைவிட்டு அரசியல் தீர்வுப் பாதையில் செல்லுமாறும் உரத்த குரலில் கொழும்பு அரசிடம் கூறவேண்டும்.

# வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்

## காவல்துறை பொறுப்பாளர் அறிக்கை

வீதி விபத்துக்களைத் தடுக்க ஒத்துழைப்புத் தாருங்கள் என்ற தலைப்பில் தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது

எம்மை நாமே ஆளத் துடிக்கும் இதே வேளையில் எங்களது உயிர்ப்பாதுகாப்பை நாமே தேடிக் கொள்ள வேண்டும்.

எங்களை ஒழுங்கான, நாகரிகமான பரந்த நோக்கமும், பண்புள்ள செயற்திறனும் கொண்ட ஓர் இனமக்களாக எதிர்காலத்தில் உலகம் போற்ற வேண்டும் என்ற எண்ணம் உங்களின் இதயங்களில் தோன்றுகின்றதல்லவா? ஆனால், அதைச் செயற்படுத்த ஏன் தாமதிக்கின்றீர்கள்?

ஆயிரக்கணக்கில் தமது உயிர்களைத் தியாகம் செய்து தமிழீழ மண்ணை மீட்க எமது உடன்பிறப்புகள் போராடும் இவ்வேளையில், எமது மக்களின் பாதுகாப்பையும், ஒழுங்கு கட்டுப்பாடுகளையும் சிந்திக்கும் திறன்கொண்ட நாங்களே ஏன் அதனைக் கடைப்பிடிக்கக்கூடாது?

சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். மேலைநாட்டுச் சுக போகங்களையும், முன்னேற்றங்களையும் பெரிதுபடுத்திப் பேசும் நீங்கள், அவ்வாறான வசதிகள் அங்கு எப்படி ஏற்பட்டன என்று ஆராய்ந்து பார்த்தால் தெரியும். நாமும் அந்த நிலையைச் சுலபத்தில் பெற்றுவிட முடியும் என்று.

மேலைநாட்டு மக்களும், அரசுகளும் அடுத்த மனிதனின் சுகம், வசதிகள், பாதுகாப்பு யாவும் தன்னொருவனால் சிறிதும் பாதிக்கப்படக் கூடாது என்று (சிறுவர் முதல் முதியோர் வரை) சிந்தித்துச் செயற்படுவதனாலேயே அந்நிலை ஏற்பட்டுள்ளது. இன்று எமது தமிழீழம் எதிர்நோக்கியிருக்கும் தொல்லைகளில் இருந்து விடுபடவும், எமது உயிர்ப் பாதுகாப்புக்களையும் உள்நாட்டு ஒழுங்குகளையும் கடைப்பிடிக்க நாம் உடனே செயற்படுவோமாக.

### வீதிப் போக்குவரத்து

நாம் முதலில் கவனம் செலுத்தவேண்டியது முக்கியமாக வீதிப்போக்குவரத்துக் கட்டுப்பாடு.

பாடசாலைகளில் பயிலும் சிறுவர் முதல் அரச நிறுவனங்களிலும், வேறு துறைகளிலும் பணியாற்றும் பெரியவர்கள் வரை 90 சத வீதமானோர் வீதிகளில் செல்லும்போது வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காது செல்வதைக் காண நேரிடும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

இதனால் ஏற்படுகின்ற விபத்துகளும், அழிவுகளும், உயிரிழப்புகளும் ஏராளம்.

இவைகளைக் கட்டுப்படுத்தும் சக்தியும் எம்மிடமே உண்டு என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இன்றுவரை எமது போக்குவரத்து வீதிகள இருவழிப் பாதையாகவே அமைந்துள்ளன. அதுவும் குறுகிய அளவு அகலத்தைக் கொண்டுள்ளது. தற்போது இந்த வீதிகளைப் புதுப்பித்தல் இயலாத காரியம். ஆனால், நாம் எமது சிந்தனையை விரிவுபடுத்தி அதில் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க முடியும்.

எங்களால உணரப்படும் 'ஆசைகள், எண்ணங்கள்' அனைத்திலும் பார்க்க அரியதும், பெறுமதி மிக்கதும் எமது 'உடலும், உயிரும்' ஆகும். இவை பாதுகாக்கப் படவேண்டும். எமது வருங்கால சமூகத்தின் முதுகெலும்புகள் இன்றைய மாணவர்களும், மாணவிகளும். இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். உங்களால் தான் எங்கள் சமூகத்தை வழிநடத்த முடியும்.

### வலதுபுறமாக நடவுங்கள்

வீதிகளில் நடந்து செல்வோர் தமது வலதுபக்க ஓரமாக நடக்கவேண்டும் இதனால் தம் எதிரே வரும் வாகனங்களை அவதானித்து நடையைத் தொடரலாம். வீதியின் இடதுபக்கமாக நடந்தீர்களானால், உங்கள் பின்னால் வரும் வாகனங்களை அவதானிக்க முடியாது.

வீதிகளில் வாகனங்களில் செல்லும்போது உங்களின் இடதுபக்கத்தை உபயோகிக்கவும். அதாவது வீதியின் மையக்கோட்டிற்கு இடப்பக்கம்.

வலதுபக்கம் எதிரே வருபவர்களுக்கு மட்டும் என்பதை மறக்கவேண்டாம்.

போக்குவரத்து அதிகமான நேரத்திலும் சரி, குறைந்துள்ள நேரத்திலும் சரி உங்கள் பக்கம் இடதுபக்கம் தான் என்பதை மறக்கவேண்டாம். சைக்கிளில் செல்லும்போது ஒருவரோடு ஒருவர் பக்கத்தில் [சமாந்தரமாக] அளவளாவிக் கொண்டுபோக வேண்டாம். ஒருவர் பின் ஒருவராகச் செல்லுங்கள். முன்னே செல்பவரைக் கடக்கும்போது [முந்திச்செல்ல நேரிடும்போது] ஒரே நேரத்தில் [சமாந்தரமாக] முந்திச் செல்லாதீர்கள்.

சந்திகளில் [3, 4 வீதிகள் சேரும் இடம்] திசை மாறும் வேளைகளில் எச்சரிக்கையாக இருங்கள். உங்களின் வலதுபக்கம் திரும்ப வேண்டியபோது சந்திக்கு 50 யார் முன்னதாகவே உங்களின் வலதுகையைக் குறுக்காக நீட்டி பின்னால் வருபவர்களுக்கும், எதிரே வருபவர்களுக்கும் எச்சரிக்கை கொடுத்த வண்ணமே வீதியின் மையக்கோட்டருகே வந்து, சந்தியின் மையத்தைச் சுற்றி தொடர்ந்தும் 50 யார் சென்று பின்னர் இடதுபக்கம் தொடருங்கள்.

சைக்கிளையோ அல்லது வாகனங்களையோ திடீரென நிறுத்திப் பின்னால் வருபவர்களை ஆபத்தில் சிக்கவைக்காதீர்கள். தேவையாயின், இடதுகையைக் குறுக்காக காட்டி இடது கரைக்கு வந்து நிறுத்துங்கள். இந்த விதிமுறைகளை எந்த நேரங்களிலும் எல்லா வீதிகளிலும் கடைப்பிடியுங்கள்

கடைகளின் முன்னாலும், வீட்டுப் படலைகளின் முன்னாலும் சைக்கிள்களையோ மற்றும் வாகனங்களையோ நிறுத்தும்போது வீதிக்குக் குறுக்கே நிறுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இயலுமானவரை வீதியின் ஓரத்தில் நிறுத்துங்கள்.

சிறு வீதிகளில் இருந்து வெளிவந்து பெருஞ் சாலைகளில் ஏறும்போது எல்லாத் திருப்பங்களிலும் (முடக்குகளிலும்) எச்சரிக்கை ஒலியை ஒலிக்கச்செய்யுங்கள்.

இடதுபக்கம் செல்ல வேண்டுமாயின இடது பக்க மூலையோடு திரும்புங்கள் உங்கள் இஷ்டப்படி வலது பக்கமாகவும் வந்து இடது பக்கத்துக்குத் திரும்பும் பழக்கத்தை விட்டுவிடுங்கள்.

இதே நேரம் வலது பக்கம் திரும்ப வேண்டும் என்றால் நீங்கள் வருகின்ற வீதியோ, ஒழுங்கையோ எதுவாயினும் அதன் மையக்கோட்டில் வந்து நின்று மேலே தொடருங்கள். கண்டிப்பாகச் சைக்கிளையோ மோட்டார் வாகனத்தையோ மற்றவர்களை அச்சுறுத்தும்படி ஓட்டாதீர்கள்.

வீதிப் போக்குவரத்தினால் ஏற்படும் விபத்துக்களையும், உயிரிழப்புக்களையும், வாகனங்கள, பொருள்கள் சேதப்படுத்தப்படுவதையும் தவிர்த்துக் கொள்வதன் மூலம் நீங்களும் தமிழீழ விடுதலைப் போருக்கு உங்கள் பங்களிப்பைச் செய்கிறீர்கள் என்பதை எண்ணிப் பெருமை அடைவீர்களாக. [இ]

# தமிழீழத் தேசிய உணர்வை உலகுக்கு எடுத்துரைத்தவர்

## கோவை மகேசனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 11

இனமான எழுத்தாளர் கோவை மகேசனை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துமாறும் —

அதன் பொருட்டு இன்று கோப்பாயில் நடக்கும் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக கலை பண்பாட்டுக் கழகம் விடுத்துள்ள செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழத் தாயகத்தை வென்றெடுப்பதில் என்றும் நிலையான கருத்தைக் கொண்டிருந்தவரும், எமது இயக்கத்தின் தலைமையைப் பூரணமாக ஏற்று அதன்வழி நடத்தலில் தொடர்ந்தும் பணி செய்தவரும், தமிழீழத் தேசிய உணர்வை உலகிற்கு எடுத்துரைத்தவருமான, 'சுதந்திரன்', 'சுடர்', 'வீரவேங்கை' ஆகியவற்றின் ஆசிரியர் அமரர் கோவை மகேசனின் இழப்பு எம்மை ஒரு கணம் திகைக்கவைத்தது

இவர் எழுதிய அரசியல் மடல்களும், ஆசிரியத் தலையங்கங்களும், நூல்களும் எமது தமிழீழத் தாயகத்தின் பிறப்புக்கான போராட்டத்துக்குப் பெரிதும் துணைநின்றன.

இந்திய அமைதிப்படையென்று இங்கு வந்த இராணுவத்தினரின் அடாவடித்தனங்களை இந்தியாவில் இருந்து கொண்டே 'வீரவேங்கை' பத்திரிகை மூலம் உலகிற்கு உரத்துச்சொன்னார் — என்று உள்ளது [அ]

## ஆரம்ப ஆசிரியர் தெரிவுப் பரீட்சை:

# வெளிமாவட்ட மாணவர் பரீட்சைக்குத் தோற்ற வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 11

இன்று நடைபெற இருக்கும் ஆரம்ப ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளிமாவட்ட மாணவர்களும் தோற்றுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான அனுமதியை பரீட்சை ஆணையாளர் நேற்று வழங்கியதுடன் அது சம்பந்தமான தகவலை யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தருக்கும் அறிவித்திருந்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் உட்பட வெளிமாவட்ட மாணவர்கள் சுமார் 60 பேர் இப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இப்போதைய இராணுவ நடவடிக்கைகளால் அவர்கள் தமது மாவட்டங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றமுடியவில்லை.

இதனைக் கருதியே அவர்கள் யாழ்ப்பாணத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த வெளிமாவட்ட மாணவர்கள் இன்று காலை 8 மணிக்கு பல்கலைக்கழகத்துக்குச் சென்றால் அவர்களுக்குரிய பரீட்சை மண்டபங்கள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளலாம் எனத் தெரிய வருகிறது. [அ]

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 11

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய நற்கருணை விழாவும் பவனியும் இன்று சனிக்கிழமை மாலை இடம்பெறும். [இ]

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 11

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் - ஐயனார் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை விசேட அபிஷேகம், பூசை, வழிபாடு ஆராதனையுடன் நடைபெறும். [ஒ-30]

## நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 11

பாலர் கல்விக் கழகம் நிர்வகிக்கும் ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலை பாலர்களுக்கு இடையேயான முதலாவது வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [ஒ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 11

இடம்பெயர்ந்த தீவக மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கான கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு அத்தியடியில் உள்ள இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் சமூக அலுவலகத்தில் நடைபெறும்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களின் தலைவர்கள், செயலாளர்கள், சமூக நிர்வாக சபை உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

## மரணம்

மயிலணி, ஜூலை 11

கடந்த 4 ஆம் திகதி சுன்னாகத்தில் நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் படுகாயமடைந்து யாழ். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வீரசிங்கம் குலமணி என்ற பெண்மணி நேற்று முன்தினம் ஆஸ்பத்திரியில் மரணமானார். [உ-89]

## இன்று

நவாலி, ஜூலை 11

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான தடகள போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இத்தலைவத்தில் பிரதம விருந்தினராக மாவட்ட பிரதி ஆணையாளர் திரு துவைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட திட்ட பணிப்பாளர் திரு. சே. பத்மநாதன். மானிப்பாய் கோத்தணி அதிபரும் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபருமான திரு. கி. சேகவராஜன் ஆகியோரும் கலந்து கொள்வர். [இ-100]

★ ★ ★

யாழ். அரசடி வீதி ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் முதலாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி, இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது [ஒ-69]

### புலிகளின் புதிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாதுகாப்புப் படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் —

பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதி எனக் கூறிக் கொள்ளும் இடங்களில் கூட, இராணுவம் பெரும் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய நிலையில் இருக்கிறது என்பதையே திருமலைத் தாக்குதல் எடுத்துக் காட்டுகிறது என பி. பி. ஸி. வர்ணித்தது.

கடந்த இருவாரங்களாக சண்டைகள் நடந்து வரும் வடபகுதியில் இருந்த பலரின் கவனம் தற்போது கிழக்கு நோக்கித் திரும்பியிருக்கிறது என்றும் மேலும் அதில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ-5]

### கோவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு ஆ. தேவர் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகும்.

திருவாளர்கள் சா. ஆ தர்மரத்தினம், ஐபா, சச்சிதானந்தம், க. சொக்கலிங்கம், தமிழ் மறவன், பொன். பூலோகசிங்கம், யோகரத்தினம் யோகி, மாமனிதர் எஸ். ரி. அரசு ஆகியோர் நினைவஞ்சலி உரைகள் நிகழ்த்துவர்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தினை நடத்துகின்றனர்.

### புலிகளின் புகழுடல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 3 மணிக்கு இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

மக்கள் அஞ்சலிகள் முடிவுற்றதும் விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் இரங்கலுரைகள் இடம்பெற்றன.

இரங்கலுரைகளைத் தொடர்ந்து மாலை 6.30 மணியளவில் மக்கள் ஊர்வலம் பின் தொடர மாவீரர்களின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு புனித புதைகுழிகளில் புகழுடல்கள் விதைக்கப்பட்டன.

வடமராட்சியைச் சேர்ந்த சிலரின் புகழுடல்கள் வடமராட்சியில் நேற்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

வளலாய், இடைக்காடு பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற காவலரண்கள் தகர்ப்பின்போது வீரமரணமடைந்த வேங்கைகளினது புகழுடல்களும் நேற்று வடமராட்சியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

போராளிகளின் இல்லங்களில் புகழுடல்கள் வைக்கப்பட்டிருந்தபோதும் அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த — மக்கள் அஞ்சலி செலுத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்
Saiva Siddhanta Study Circle

## 3ஆம் ஆண்டு நிறைவு விழா
## கருத்தரங்கு

தலைமை : திருமதி அருள்நங்கை, B. A. (Hons.) [இந்துநாகரிகம்]

ஆய்வுரை : பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகள் Dr; Dr; Vid. Pulavar

★ இந்து தத்துவத்தில் சைவசித்தாந்தம்
★ பொதுநலப் பண்பே சைவசித்தாந்தத்தின் உயிர் மூச்சு
★ சைவ சித்தாந்தமும் அண்மைக்கால ஆய்வுகளும்

காலம் : 12 - 07 - 1992 [ஞாயிறு] காலை 9-30 மணி
இடம் : நாவலர் மண்டபம் (நாவலர் வீதி, யாழ்.)

ஆர்வலர் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலாளர்

238, பிரதான வீதி, யாழ். [சி/2564]


# சுப்புலட்சுமி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாற்றப்பட்டார்.

அவர் அங்கு சிகிச்சை பெற்று வந்தபோதே கொலை முயற்சிக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த வார்டுக்குள் திடீரெனப் புகுந்த இளைஞர் ஒருவர், அங்கு காவலில் இருந்த பொலீஸ்காரர் ஒருவரின் துப்பாக்கியைப் பறித்து ஜெயதீசனைச் சுட முயன்றதாகவும் —

ஆனால் மற்றைய பொலீஸார் அந்த இளைஞரை மடக்கிப் பிடித்தனர் என்றும் கூறப்படுகிறது.

பிடிபட்ட இளைஞரை மருத்துவ மனையில் இருந்த பொலீஸ் நிலையத்துக்கு பொலீஸார் கூட்டிச் சென்றனர் என்றும்—

ஆனால் அங்கு வந்த வேறு இருவர் அந்த இளைஞர் மனநோயாளி என்று கூறியதை அடுத்து பொலீஸார் இளைஞரை விடுவித்துவிட்டனர் என்றும் தெரிவருகிறது.

ஆனால் குறிப்பிட்ட இளைஞர் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து இடங்களை அறிந்து கொள்வதற்காகவே, மனநோயாளர் பிரிவில் நோயாளி என்ற போர்வையில் நுழைந்தார் என்றும்—

ஆனால் அவரைப் பரிசோதித்த டாக்டர் அவர் பைத்தியம் அல்ல என்று தெரிவித்து ஆஸ்பத்திரி வார்ட்டில் இருந்து வெளியேற்றி விட்டார் என்றும்—

அந்த இளைஞர் பின்னர் ஜெயதீசன் தங்கியிருக்கும் "வார்ட்" எது என்று விசாரித்து அங்கு சென்று, அவரைச் சுட்டுக்கொல்ல முயன்றார் என்றும் சென்னைப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ]

# மேலும் மூவர் வீரமரணம்

பலாலிப் பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற மற்றொரு மோதலில் வீரவேங்கை அருள் நம்பி [மரியதாஸ் ஜோன்சன் — பாஷையூர்] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

★ ★ ★

வலிகாமம் வடக்கில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் கலையரசன் அல்லது ரொபின்சன் [ஹரிகிரிதாசன் டொரிக்நத் — மயிலிட்டி] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

★ ★ ★

மட்டக்களப்பு பெண்டுகல் சேனையில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்ற மோதலில் விழுப்புண் அடைந்திருந்த வீரவேங்கை இளங்கோ [செல்லத்தம்பி பாலச்சந்திரன் — மன்னம்பிட்டி] வீரமரணமடைந்துவிட்டார். [ஒ]

## ஊர்வாரியாக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னம் முகாம்களிலும்—

திருகோணமலையை சேர்ந்தோரை செங்கல்பட்டு சாலவன்குப்பம் மற்றும் நெமிலி முகாம்களிலும்—

மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்புப் பகுதிகளைச் சேர்ந்த அகதிகளை செய்யார் வட்டம் வேம்பனூர் முகாமுக்கும் மாற்றப்படவுள்ளனர்.

இந்த அறிவிப்பை அடுத்து கும்மிடிப்பூண்டி தடுப்பு முகாமில் இருந்த— வவுனியா, மன்னார், கிளிநொச்சி பகுதி அகதிகளைத் தவிர்ந்த ஏனையோர் — வேறு முகாம்களுக்கு பலவந்தமாக இடம் மாற்றப்பட்டனர்.

வேறு முகாம்களிலிருந்து பலர் கும்மிடிப்பூண்டி தடுப்பு முகாமுக்குக் கூட்டி வரப்பட்டனர்.

அகதிகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் இடம் மாற்றப்படுவதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன. [உ]

# ஐவரிடமிருந்து மிரட்டி ஒப்புதல் வாக்குமூலம்

சென்னை, ஜூலை 11

ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாக எடைசியாகக் கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் தங்களை சி. பி. ஐ. பொலீஸார் மிரட்டி ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியதாக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

விஜயானந்தன், சிவரூபன், சண்முகவடிவேல், சாந்தி, செல்வலட்சுமி ஆகிய ஐவருமே இது தொடர்பாக நீதிமன்றத்தில் தனித் தனியாக மனுத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்து வரும் தனி நீதிமன்றத்தில் நீதிபதி சித்திக் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தன. விசாரணையை நீதிபதி ஒத்தி வைத்தார். (உ)

## கந்தளாயில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மடு முகாம் படை அணி மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். அதை அடுத்து அவர்கள் முகாம் திரும்பி விட்டனர்.

திருமலை மகிந்த புரத்தில் கடந்த 9 ஆம் திகதி ஏற்பட்ட மோதலில் 7 போராளிகள் வீரமரணமடைந்து 31 ஆம் நாள் நிறைவு அடைவதை ஒட்டியே நேற்றைய வெற்றிகர தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், திருமலையில் புலிகள் நடத்திய தாக்குதலில் 16 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் மற்றும் பலர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ]

## சிறப்புத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சண்டிலிப்பாய், மானிப்பாய், யாழ்ப்பாணம், அரியாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளிலும் —

தென்மராட்சிப் பிரிவில் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களிலும்—

வடமராட்சிப் பிரிவில் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் வீரவேங்கை மேஜர் அசோகனின் புகழுடல் விதைக்கப்படும். [உ]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1942 | 1992 |
| — | — |
| 12 | 06 |
| — | — |
| 19 | 11 |

அமரர்

### மாணிக்கம் தங்கவடிவேல் (ஓவசியர்)

[ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர்]

எம் குலவிளக்காய்த் திகழ்ந்து ஒளிகாட்டிய எம் தலைவா கணமேனும் எமைப்பிரியாது நிழலாய் நின்று எமைக்காத்து வந்தவரே நாம் விரும்பும் பொருள் பண்டம் யாவும் ஈந்து ஏற்றம்பெற வைத்தவரே, கல்வியில் கரைசேர வழிகாட்டியாய் இருந்தவரே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் தோன்றாத்துணையாய் இருந்து எங்கள் எதிர்கால வளமான வாழ்வுக்கு ஆசீர்வதிப்பீரய்யா.

மனைவி பிள்ளைகள்

'தங்கத்தாமரை'
அல்வாய் தெற்கு,
அல்வாய். (21720)



## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 11 |
| — | — |
| 04 | 07 |
| — | — |
| 1932 | 1991 |

### அமரர் வஸ்ரியாம்பிள்ளை யோண்தம்பிஜயா

''நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்''

சங் 23 : 6

ஜீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்.

''சந்திரன் இல்லம்'', பண்டத்தரிப்பு:

சகோதரர்கள், பிள்ளைகள். [5146]



## O/L சனி - ஞாயிறு (மீட்டல்)
## புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது

[சொற்ப அனுமதிகள் மட்டுமே உள்ளன]

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

[சி/2915]



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 | 04 |
| — | — |
| 12 | 07 |
| — | — |
| 1927 | 1990 |

அமரர்

### செல்லையா சிவஞானசம்பந்தன்

(சரவணையூர் சோதிடர், இளைப்பாறிய அதிபர்)

திதி: 11 - 07 — 1992

அன்பின் உருவமாய், பாசத்தின் பிறப்பிடமாய் கண்ணை இமை காப்பது போல் எம்மை எல்லாம் காத்தீரே! திடீரென காலன் உம்மை அழைத்தானே! ஈராண்டு சென்றாலும், உங்கள் பொன்னான நினைவுகள் எங்களைவிட்டு பிரியாது துடிக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இ. சித்தானந்தன்,
V. H. வேன்,
[illegible]
இருபாலை. (21691)



திருநெல்வேலி
## தலங்காவற் பிள்ளையார் தேவஸ்தானம்
## விசேட ஸ்நபன அபிஷேகம்

புனித மண் மீட்பு போரில் ஈடுபட்டிருக்கும் போராளிகளுக்கு ஆசியும் வெற்றியும் வேண்டி சனீஸ்வரனுக்கு விசேட ஸ்நபன அபிஷேகம்.

இன்று சனிக்கிழமை

★ மாலை 5.00 மணிக்கு

"விசேட மேளக் கச்சேரி"

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| கா. கிருஷ்ணதாசன் | ஜெயராமன் |
| சு. தேவதாசன் | ஆர். ஜீவா |

★ இரவு 8.00 மணிக்கு

சிறப்பு நிகழ்ச்சியாக

கம்பன் கழகம் வழங்கும் ''வீறுகொண்ட பெண்மையின் எழுச்சி பெரிதும் வெற்றி கண்டது கண்ணகி மூலமே, பாஞ்சாலி மூலமே'' என்னும் பொருளில் பட்டி மண்டபம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து
சாளிகோவிலடி இந்து இளைஞர் மன்றம் வழங்கும்

### "காத்தவராயன் கூத்து"

நாடகமும் இடம்பெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

இங்ஙனம்:
விநாயக அடியார்கள்

பிரசுர அன்பளிப்பு:- ஹரன் புடவை மாளிகை, திருநெல்வேலி.
[சி/2566]



## மரண அறிவித்தல்

### அருணாசலம் சுப்பிரமணியம்

அருணாசலம் சுப்பிரமணியம் காலமானார். இவர் புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு கதிரேசன் வீதி மணியம் கபே உரிமையாளரும், காலம் சென்ற காமாட்சியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, குலசேகரம்பிள்ளை, மதியாபரணம், மகாலெட்சுமி, சிவரட்ணம், தில்லைநாதன், கிருஷ்ணவேணி, காலம் சென்ற ரவீந்திரன், சண்முகராசா ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற தருமலிங்கம்,சுசீலாதேவி, இராசேஸ்வரி, கணேசன், சிவகுமாரி, விஜயராணி, காலம் சென்ற இராசம்மா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11-07-92) பிற்பகல் 4 மணிக்கு 160, கண்டி வீதி, அரியாலை அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக அரியாலைசித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

160 கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். [21722]

தகவல்
மகாலெட்சுமி கணேசன் (மகள்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org